DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 312/2024

Prosecution witness – PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. அபீஷ் | Caste: | |
| Father's Name | : முத்துச்சாமி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

09.02.2026 – 04.30 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி கமுதி போலீசாரால் ஆஜர் படுத்தப்பட்டார். சாட்சியின் தோற்றத்தில் இளவராக தெரிந்ததால் அவரது ஆதார் அடையாள அட்டையை பார்த்தபோது அவருக்கு 16 வயது நிரம்பியுள்ளது தெரிய வந்ததால் அவரது மனநிலை குறித்து அறிந்து கொள்ள பின்வரும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

1. உங்கள் பெயர் என்ன?

பதில்– அபீஷ்

2. உங்கள் அப்பா பெயர் என்ன?

பதில்– முத்துச்சாமி

3. உங்கள் அம்மா பெயர் என்ன?

பதில்–இந்திரா

4. உங்களுக்கு என்ன வயதாகிறது?

பதில்– 16 வயது

5. நீங்கள் இப்போது என்ன படிக்கிறீர்?

பதில்–எனக்கு விபத்து நேர்ந்ததால் பள்ளிக்கு செல்ல இயலவில்லை.

6. நீங்கள் யாருடன் இங்கு வந்துள்ளீர்?

பதில்– எனது அம்மா மற்றும் தாத்தாவுடன் வந்தேன்.

7. இது என்ன இடம் என்று தெரியுமா?

பதில்– தெரியும். கோர்ட்.

8. நான் யார் என்று தெரியுமா?

பதில்– நீதிபதி

9. நீங்கள் எதற்காக இங்கு வந்துள்ளீர்?

பதில்– விபத்து சம்மந்தமாக கூறுவதற்கு வந்தேன்.

10. யாரேனும் உம்மை இப்படித்தான் சொல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்களா?

பதில்–இல்லை, நானாக தான் சொல்ல வந்தேன்.

சாட்சியை மேற்படி கேள்வி கேட்டதில் அவர் கேள்விகளை புரிந்து கொண்டு தொடர்புடைய பதில்களை வழங்கியதால் அவர் நல்ல மனப்பக்குவத்துடன்

உள்ளார் என்பதை உறுதி செய்து கொண்டு அவரது சாட்சியம் பின்வருமாறு பதிவு செய்யப்படுகிறது.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. எங்கள் வீடு பாம்புல்நாயக்கன்பட்டியில் உள்ளது. நான் எனது அப்பா, அம்மாவுடன் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அ.சா.1 இந்திரா எனது தாயார். 03.01.2024 ம் தேதி மாலை 04.30 மணியளவில் எனக்கு பள்ளி முடிந்தது. நான் பள்ளி முடிந்து நானும் எனது நண்பர்கள் மாரிமுத்து, முத்தழகன் ஆகியோர் சேர்ந்து அவரவர் வீட்டிற்கு செல்வதற்காக சந்தைப்பேட்டை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி ஆட்டோவை ஓட்டிக் கொண்டு அங்கு வந்தார்.

2. அந்த ஆட்டோவில் ஓட்டுநர் இருக்கைக்கு அருகிலேயே எனது அப்பா முத்துச்சாமியும் உட்கார்ந்திருந்தார். என்னைப் பார்த்தவுடன் எனது அப்பாவும் ஆஜர் எதிரியும் ஆட்டோவை நிறுத்தினார்கள். நான் ஆட்டோவின் முன்புறம் ஓட்டுநர் இருக்கைக்கு அருகிலேயே அமர்ந்து கொண்டேன். ஆட்டோவின் பின்புறம் 4, 5 பள்ளி குழந்தைகள் இருந்தார்கள். அதனால் ஆட்டோவின் பின்புறம் இடம் இல்லை. அதனால் ஓட்டுநர் இருக்கையில் ஓட்டுநருக்கு இடது புறம் அப்பாவும் வலது புறம் நானும் உட்கார்ந்து கொண்டோம்.

3. ஆஜர் எதிரி அருகில் நான் உட்கார்ந்திருந்தபோது அவர் மது அருந்தியிருப்பது போன்று வாடை வந்தது. ஆஜர் எதிரி ஆட்டோவை வேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டினார். அவ்வாறு ஓட்டியதில் ஆட்டோ இங்கும் அங்கும் ஆடியது. என்னால் பிடிக்க முடியவில்லை. ஆட்டோ பாலத்தை தாண்டியவுடன் கமுதியிலிருந்து சாயல்குடி செல்லும் சாலையில் நான் ஆட்டோவில் இருந்து கீழே விழுந்துவிட்டேன். என்னுடைய சட்டை ஆட்டோவில் இருந்த ஒரு கம்பியில் மாட்டிக் கொண்டது.

4. நான் கீழே விழுந்து கத்தக் கத்த ஆஜர் எதிரி அதை கவனிக்காமல் ஆட்டோவை ஓட்டிச் சென்றதால் எனக்கு இடது புற மணிக்கட்டுக்கு மேல் உள்ள முன் கை முழுவதும், இடது கால் பாதத்தின் பின்பகுதியான குதிங்காலிலும், முகத்தில் இடது பக்க புருவத்திற்கு அருகிலும் சிராய்ப்புக் காயம்

ஏற்பட்டது. அவ்வாறு ரோட்டில் எனது இடது முன் கை உரசியதில் எலும்பு தெரியும் அளவிற்கு சதை முழுவதும் சிதைந்து விட்டது. நரம்புகளும் சிதைந்து விட்டது. அந்த விபத்தின் போது எனது தகப்பனாரும் கீழே விழுந்து அவருக்கு இடது கால், இடது கை ஆகிய இடங்களில் காயம்பட்டது.

5. பின்னர் நான் மயங்கிவிட்டேன். நான் கண் விழித்துப் பார்த்தபோது என்னை ஆம்புலன்சில் சக்திவேல் என்பவர் ஏற்றிக் கொண்டிருந்தார். என்னை கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கிருந்து மருத்துவர்கள் என்னை மேல் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார்கள். அதனால் என்னை சக்திவேல் என்பவர் மதுரை ப்ரீத்தி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். சக்திவேல் எங்கள் ஊர்க்காரர். நான் மதுரை ப்ரீத்தி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எனது அம்மா அங்கு வந்துவிட்டார்.

6. எனது அப்பாவை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். நான் சம்பவ சமயத்தில் 9ம் வகுப்பு படித்து வந்தேன். என்னால் எனது படிப்பை தொடர இயலவில்லை. எனது தாயார் தான் சம்பவம் தொடர்பாக போலீசாரிடம் சொன்னார். போலீசார் என்னை விசாரித்தனர். அன்றைய தினம் ஆட்டோவை ஓட்டியது ஆஜர் எதிரிதான்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.02.09 17:09:05 +0530